# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

### அ.சா. 4(LW 4)

| **பெயர்** | பாலன் (எ) பாலமுருகன் | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | பெருமாள் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **15.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது ராஜதானிக்கோட்டையில் குடியிருந்து பஞ்சர் கடை வைத்திருகிறேன். நான் 7 வகுப்பு வரை படித்துள்ளேன். என்னை பாலன் என்று அழைப்பார்கள். வழக்கில் இறந்து போன ராஜ்குமாரை தெரியாது. எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையிலும், கடந்த 26.06.2022 ஆம் தேதி மாலை 04.15 மணிக்கு நானும், ராஜ்குமார், அழகேசன், பெருமாள் ராஜா, அஜித்குமார், சோனைமுத்து ஆகியோர்கள் எங்கள் ஊர் கோவில் அருகில் நின்று கொண்டிருந்த போது மேற்படி 1 ஆம் எதிரி மனோஜ்குமார், பெருமாள் ராஜாக்கு போனில் தொடர்பு கொண்டு என்டா நீ ஊரில் பெரிய ஆளாடா எங்கடா இருக்க என்று கேட்டதாகவும், அதற்கு நான் பகவதி அம்மன் கோவில் அருகில் இருப்பதாக சொன்ன உடன் 04.30 மணிக்கு 1 ஆம் எதிரி மனோஜ்குமார், 2 ஆம் எதிரி அன்பழகன் உடனே அங்கே வந்து எங்களுடன் சண்டை போட்டார் என்றும், அப்போது மனோஜ்குமார் கையில் அரிவாள் வைத்திருந்தார் அன்பழகன் கம்பி வைத்திருந்தார்கள் என்றும், அப்போது மனோஜ்குமார் பெருமாள் ராஜாவையும், ராஜ்குமாரையும் பார்த்து உங்கள் இருவரையும் போட்டுதள்ளிவிடுவோம் என்று சொல்லி அன்பழகன் கம்பியை எடுத்து எங்களை பார்த்து இத்துடன் செத்து துலைங்கடா என்று ராஜ்குமார் முகத்தில் கம்பியால் அடித்தார் என்றும், இதனை தடுக்க

சென்ற பெருமாள் ராஜாவை, அன்பழகன் பெருமாள் ராஜாவின் தலையின் முன்பக்கம் அடித்து ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், மனோஜ்குமார் ராஜ்குமாரை கீழே தள்ளிவிட்டு அவன் மேல் ஏறி உர்காந்து ராஜ்குமாரின் கழுத்தை அறுத்தார் என்றும், அன்பழகன் ராஜ்குமாரின் காலை பிடித்து கொண்டார் என்றும், இதனை பார்த்த நான் அழகேசன், அஜித்குமார், சோனைமுத்து சத்தம் போட்டுக்கொண்டு ஓடி வர அங்கிருந்த எதிரிகள் இருவரும் ஓடிவிட்டார்கள் என்றும், பின்பு ராஜ்குமாரை ஆம்புலன் வரவழைத்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், பெருமாள் ராஜா அம்மையநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், மேற்படி சம்பவத்தால் ராஜ்குமார் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்றும், அது சம்பந்தமாக பெருமாள் ராஜா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால், அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.12 00:08:24 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.